## உ உ விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

யாடுதல்போற் கொன்று ரவர்பதத்தைச் சேருதலும்
நீடுமொரு வாவியன்னை நீர்குடையத்—தேடுதல்போல் ௨௫௦
ஆங்கிறங்கித் தானோ ரடல்சேர் கராமுதுகில்
ஓங்கிவிளை யாடிதுறை யுற்றிடலும்—சோங்கியதோர் ௨௫௧
சித்ரனெனுங் காந்தருவச் செல்வன்றன் முன்வந்து
அத்தனைத்தாழ்ந் தாங்கவன்சா பந்தீர—முத்திகொடுத் ௨௫௨
தக்கா சிபரிட்த்தி லாகானா தும்புருவென்
மிக்கதவர் வந்தேற்றும் விக்கிரகம்—ஒக்கமறைத் ௨௫௩
தாரிவற்றைக் கேட்டந்தைக் காவென்றுவாய்திறக்க
சீரியவத் தேவர்கடஞ் சேருலகை—நேர்கண்டு ௨௫௪
எந்தையடி தாழ்ந்தேற்ற வீறிலவற் றைக்கொடுத்து
முந்துமைந்தாண் டாக விதிமுறையே—தந்தை ௨௫௫
உபநயனஞ் செய்விப்பா னோர்ந்துரைக்கத் தேவர்
தவமுனிவர் யாவர்களுஞ் சார்ந்த—சபைநடுவில் ௨௫௬
பிங்கலனை யாதியைந்து பேரவுண ரந்தணராய்
அங்ஙனடைந் தக்ஷதையா மம்புவிட—எங்கள் ௨௫௭
பெருந்தவத்தால் வந்தபிள்ளை பெற்றியறிந் தைந்து
திருந்த க்ஷதைகொடவர்ச் செற்றார்—வருந்தேவர் ௨௫௮
காணிக்கை யாகக் கவின்சேர் பிறைகமுதல்
பூணுமணி பற்பலவும் போரேறும்—காணும் ௨௫௯
அவரவருக் குள்ள வரும்பொருள்பேர் தந்தார்
இவர்மகிழ்ந்து கொண்டா ரினிதாய்—அவரவர்கள் ௨௬௦
சென்றதற்பின் றேவேந் திரனொருவன் சேர்செருக்கால்
நன்றியின்றி வாயுவொடு நற்கனலை—அன்றேவ ௨௬௧

று வகையான், தருமிருசரணம் விக்கினமலையைச் ஜயிக்கும்வ ச்சிரா யுதமே. ௯

சரஸ்வதி துதி.

பிரமவொளியார் நான்முகமும் பிறங்குகரங்க ளிரண்டும்
  பிணைமான்விழிக ளிருநான்கும் பெற்றமணிசின் முத்திரையும்
தரமதாகப் புவனமெலாந் தந்தாடண்ட கமண்டலமுந்
  தவளமேனி முன்னூலுஞ் சடைமாமுடிசேர் மணிச்சூடும்
வரமதாகச் சிவந்ததிரு வடியுங்கலையு மணிப்பூணும்
  வாம்பொற்சிறகாரன்னமிசை வயங்காயிரந்தோட் புண்டரிகந்
திரமதாமெய்ச் சுவாநுபவச் செல்வமெமக்குந் தருமொளியாய்த்
  திகழுங்கலைமா தினையிதயத் தேத்தித்தியானஞ் செய்குவாம்.

வேறு.

வருட்காலத் துதவுபொருண் மற்றையெட்டுத் திங்களினும்
இருளாமிரவி னுதவுபொரு ளிசைந்தவற்றைப் பகற்பொழுதும்
அருமெய்வருந்தும்வயோதிகத்திலாகும்பொருளையெவ்வனத்தும்
இருமையுணர்ந்து தேடுபொரு ளிம்மையீட்ட மறுமைக்கே. ௧௧

வேறு.

சிவனநிமித்தம் வணங்கியேகவர்ந்து சேணுறநிமிர்ந்திடு சுப வர், காவருமேற்ற மரத்தொடும்பிறந்த கனிகூட்டோரோசெட்டோ வறியேம், தாவெனவிரந்து குழைந்திடுமெளியர் தம்பிறுதானை மொன் றின்றி, ஓவறப்பெற்ற கிழந்துபின்வணங்கி யுவமைமே லுரைப்பதென் னிவர்க்கே. ௧௨

வேறு.

கட்கற்பாலது கடக்குமெம் முயர்ச்சியு மின்றி
கட்கற்பாலல தெம்முறைமுயலினு கடவா

